Registered as a News Paper மக்கங்கள்: 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 20 (03-02-1992) திங்கட்கிழமை ஓசை: 350

## சபாநாயகர் மொகமத் விரைவில் பிரதமர்?

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச் மொகமத்திற்கு பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளதாக தமக்கு நம்பிக்கையான ஆதாரம் கிடைத்துள்ளதாக சிங்கள வார இதழான 'சுலங்க' தெரிவித்துள்ளது. சபாநாயகர் மொகமத்திற்கு பிரதமர் பதவி கிடைத்தால் இலங்கைப் பாராளுமன்றத்தில் சிங்களவர் அல்லாத முதல் பிரதம மந்திரியாக அவர் இருப்பார்.

### சீனன்குடா விமானத்தள குண்டுவெடிப்பு

# விடுதலைப்புலிகளே சூத்திரதாரிகள்; விபத்தல்ல என்கிறது இந்தியா

(கொழும்பு)

"சீனன்குடா விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு வெறுமனே ஒரு விபத்து என இந்தியா நம்பவில்லை. இதன் பின்னால், விடுதலைப் புலிகளின் கரங்கள் உள்ளன என இந்தியா திடமாக நம்புகிறது. அவ்வளவு கடும் பாதுகாப்பு மத்தியிலும் விடுதலைப் புலிகளினால் எவ்வாறு விமானத்தளத்திற்குள் நுழைந்து இதனைச் சாதிக்க முடிந்ததென இந்தியா ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளது." இவ்வாறு நேற்றைய சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சீனன்குடா விமானத்தள குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய தகவல் சிறிலங்கா அரசினால் பெருமளவில் மூடி மறைக்கப்பட்டுள்ளமை இப்பொழுது கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரிய வருகிறது.

கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்களின்படி சம்பவதினம் 112 படையினரின் சடலங்கள் திருக்கோணமலையிலிருந்து கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அன்று இடம் பெற்ற குச்சவெளி தாக்குதலில் இறந்த 20 இராணுவத்தினர் தவிர்ந்த ஏனைய 92 பேரும் விமானப் படையினர் எனத் தெரிய வரு

(5ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவத்திடம் ஆயுதப் பற்றாக்குறை?

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் வடக்கிலும், கிழக்கிலும் நடத்திவரும் போரில் பாதுகாப்புப்படை ஆயுதப் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. அத்துடன் மோசமான நிலையிலுள்ள ஆயுதங்களைப் படைகள் கொண்டுள்ளதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீதுஷெல் தாக்கு; ஒருவர் படுகாயம்

(மாங்குளம்)

வல்வெட்டித்துறையில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் நால்வர் மீது கடற்படையினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார். மூவர் கரை சேர்ந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கடலுக்குச் சென்ற போது கடற்படையினர் தாக்குதலில் மீனவர் எஸ். பரமசிவன் காயமடைந்தார்.

இவர்கள் எடுத்துச் சென்ற மீன்பிடி உபகரணங்களும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ். ஊர்காவற் படையால் இரு தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப் பரிதாப சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் ஒருவரின் சடலம் வாவியில் மூழ்கிவிட்டது மற்றவரின் சடலம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 80 கோடி டாலர் கிடைக்கும்; பாஸ்கரலிங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை எதிர்பார்க்கும், எண்பது கோடி டாலர்களை எதிர்வரும் ஏழாம் திகதி பாரிஸில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் குழுச்கூட்டம் வழங்குமென்று நிதியமைச்சுச் செயலாளர் ஆர்.பாஸ்கரலிங்கம்நம்பிக்கை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் வரவு-செலவுப்பற்றாக்குறையை இலக்குக் குறிக்கப்பட்ட மட்டத்தில் கட்டுப்படுத்த முடியவில்லை என்றபோதும், நாட்டின் பொருளாதார அடித்தளங்கள் நல்ல நிலையில் உள்ளன என்றும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசு விளக்கம் கோருகின்றது

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பாக சென்னை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு அவர்களைச் சென்னை விசேட நீதிமன்றத்தில் சரணடையுமாறு கோரப்பட்டமை பற்றி விபரம் தருமாறு புதுடில்லியிலுள்ள சிறிலங்கா தூதுவரிடம் சிறிலங்கா வெளியுறவு அமைச்சு கோரியுள்ளது.

இதுபற்றி சிறிலங்கா வெளி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வெகுஜனப் போராட்ட நடவடிக்கைபற்றி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்கள் வரும் புதன்கிழமை நடாத்தவிருக்கும் மாபெரும் வெகுஜனப் போராட்டத்திற்கான ஒழுங்குகளைப்பற்றி நேற்று யாழ்.நகரில்கூடிய வெகுஜனப் போராட்டக் குழுவின் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தச்சன்காட்டில் காவலரணை புலிகள் தாக்கி அழித்தனர்

### இரு படை பலி; ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் தச்சன்காட்டில் உள்ள காவலரண் ஒன்று நேற்று அதிகாலை 1.30 மணியளவில் விடுதலைப்புலிகளால் முற்றாகத் தகர்க்கப்பட்டது. இந்தக் காவலரணில் இருந்த இரண்டு சிறிலங்கா இராணுவத்தினர் அந்த இடத்திலேயே பலியாகினர். பல நவீன ரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இந்தத் தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி-56-2 ரக துப்பாக்கி - 01
- ★ ரி-56 மகசீன் - 02
- ★ ஏ.கே.எல்.எம்.ஜி மகசீன் - 03
- ★ ஜே.ஆர்கைக்குண்டுகள் -04
- ★ தொலைத்தொடர்பு சாதனம் - 01
- ★ புகைக்குண்டுகள் - 02
- ★ ஏ.கே ரவைகள் - 950
- ★ ஹெல்மெட் - 02
- ★ சப்பாத்து - 01 சோடி

## குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலிமுகாம்பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று இரவு முதல் இன்று காலை வரை மக்கள் குடியிருப்புகளை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதலைமேற்கொண்டனர்.இந்த எறிகணைகள் தெல்லிப்பளை, குப்பிளான், ஏழாலை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதே வேளை வளலாய் பகுதி சிறிலங்கா இராணுவ காவலரண்களில் இருந்தும் பலத்த எறிகணைத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் பொதுமக்களின்பல வீடுகள் சேதமடைந்தன.

### எறிகணைத் தாக்கு

(கிளிநொச்சி)

ஆனையிறவு முகாமிலிருந்து பரந்தனை நோக்கி நேற்றிரவு

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டாவின்கீழ்மலைநாடு தமிழ் ராச்சியமாக மாறுகிறது

(கொழும்பு)

மலைநாடுதொண்டமானின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு தமிழ் இராச்சியமாகமாறிவருகிறது. இதன் எஜமானராக தொண்டமான் இருக்கிறார் என ''ஹெல உறுமய'' (தேசப் பாரம்பரியம்) இயக்கத் தலைவர் திலக் கருணரட்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று ஒரு முஸ்லிம் அல்லது சிங்களவரால் மலைநாட்டில் ஒரு துண்டு நிலத்தைக் கூடப் பெறமுடியாது. ஒரு புதைகுழிக்குக்கூட இடம் எடுக்கமுடியாதுஇலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் இதற்குத் தடையாக இருக்கிறது என்று கூறினார்.

இதேவேளை ஆட்சியைக் கைப்பற்றுவதானால் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் போன்றபலம்வாய்ந்த தமிழ்க் கட்சியோடு கூட்டுச்சேரவேண்டும் என்று சிங்கள அரசியல்வாதிகள்கருதுகிறார்கள். இதனால் பலம்குறைந்த ஒருகட்சியின் கோரிக்கைக்கு இணங்கி வளைந்து கொடுக்கவேண்டிய நிலை உண்டாகும். அத்துடன் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும்



வீரஜனனம்
23-08-1973

வீரச்சாவு
20-12-1991

### கப்டன் கிர்மாணி
### (துரைராசா சிவராஜ்குமார்)

அன்புக்கு இளையமகனாக ஆசைக்கு ஓர் தம்பியாக
குழந்தைப்பருவத்தில் குதூகலத்துடன் செங்குந்த கல்லூரியில்
கல்வி பயின்று நீர் ஓர் இலட்சியத்துக்காக
புலி வீரனாய் மாறியதும் சாதனைகள் பல புரிந்தும்
ஆனால் அது நிறைவேறுமுன் திடீரென மூதூரில் மாண்டாய் குமார்

நீ ஓர் அழியா ஓவியம்
சுதந்திரக்காற்றை சுவாசிக்க நினைத்தாய்
அது உன் சுவ சத்தையே நிறுத்திவிட்டது
ஆனாலும் நீ ஓர் காவியமாகி விட்டாய்
இனி உன் வரலாறு புகழ்பாடும்

இன்று 03-02-1992 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் மதிய போசனத்திலும் சக போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

த. துரைராசா
(முன்னாள் லிடோசினிமா முகாமையாளர்)
புதுச் செம்மணிவீதி,
நல்லூர் வடக்கு

உன் பிரிவை நினைத்து வாடும்
உறவினரும்,
குடும்பத்தினரும்

(சி/3879)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



### வீரவேங்கை தயா
### (செல்லையா பாரதிதேவி)

பிறப்பு 10.11.1974
வீரச்சாவு 03.08.1991

செந்தமிழ் மண்ணைக் காத்திட — நீ
சீறியெழுந்தாய் — சிறுத்தை
உந்தனதுள்ளம் ஊழித்தீ
உருகி வழிந்தாய் — பெருத்த
துன்பங்கள் யாவும் தாக்கியவள் - வரும்
துயரதனைப் புயலால் அழித்திட
வன்மங்கள் நெஞ்சிலே ஏந்தியவள்
வற்றாத வாழ்வில் செழித்திட
இந்த நிலத்தினில் அன்பினைச் சிந்தியே
இரத்தம் பொழிந்தாய் தயா!

74/1, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(2171)

# கிழ.மாகாணத்தில் புலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளன

- சரத் முனசிங்கா

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்று சிறிலங்கா கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கிராமோதய நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், பத்திரிகையாளர் ஒருவரின் ''கடந்த பத்துத் தினங்களில் நாற்பது ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். புலிகளின் நடவடிக்கையும் கூடியுள்ளது'' என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். தாக்குதல்களை அதிகரிக்குமாறு விடுதலைப்புலிகள் உத்தரவிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கக் காரணம் என்ன? என்ற கேள்விக்குப் பதிலளித்த முனசிங்கா ''இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகள் திரும்பி வருவதைத் தடுக்க விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர்'' என்றும்,

யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை நிறுத்த முயற்சி எடுகின்றனரா என்ற கேள்விக்கு ''எமது கவனத்தை திசை திருப்புவதே அவர்களது நோக்கம். காடுகளுக்குள் இருந்து வந்தே அவர்கள் தாக்குகிறார்கள். முந்நூறு புலிகள் முழு கிழக்கிலும் இயங்குகின்றார்கள் அவர்களைத்தேடி அழிப்பதே எமது நோக்கம்'' என்றும் பதிலளித்தார். இதே சந்திப்பில் கலந்து கொண்ட விங் கொமாண்டர் விஜித தென்னக்கோன் சீனன் குடாவில் இடம்பெற்ற விபத்துக் குறித்து தெரிவிக்கும்போது ''சீனன் குடாவில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி அங்கு நடைபெற்றது விபத்துத்தான்'' என்றும் ''விபத்து அல்ல என்ற தீர்மானத்தை மாற்றக் கூடிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை'' என்றும் குறிப்பிட்டார்.

## எல்சல்வடோரில் யுத்தநிறுத்தம் அமுல்

(சான்சல்வடோர்)

எல்சல்வடோரில் நேற்று முன்தினம் முதல் ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழான யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது.

பன்னிரண்டு வருடங்களாக இங்கு நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது, கிளர்ச்சி இயக்கத்தைக் கலைப்பது, இராணுவப் படைகளை குறைப்பது என்பன போன்ற பல முக்கிய விடயங்களில் அரசும், கிளர்ச்சியாளர்களும் இணக்கம் கண்டுள்ளனர் இதனைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் வைபவமொன்றில் அரசும், கிளர்ச்சிப் படையின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தீவிரவாத சந்தேக நபர்களை அரசின் கொலைகார கும்பல் இரக்கமின்றிக் கொன்றது

கடந்த சில காலங்களில் பல படுகொலைகள் சிறிலங்காவில் இடம்பெற்றுள்ளன. தீவிரவாதிகள் எனச் சந்தேகப்படுவர்களையும், அவர்களது உறவினர்களையும், ஆதரவாளர்களையும் அரசு மற்றும் இராணுவத்தில் செல்வாக்கு மிக்க ஒரு கொலைக் குழு மிலேச்சத்தனமாகக் கொலை செய்துள்ளது. இவ்வாறு கனேடியத் தூதுக் குழுவை மேற்கோள் காட்டி பி.பி.ஸி அறிவித்தது.

கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள் வீதிகளில் குவிக்கப்பட்டு உருத்தெரியாதுஅழிக்கப்பட்டன சென்ற ஆண்டு மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டனர். இதைவிடப் பன்மடங்கு கொலைகள் நடந்திருக்கலாம் என்று கனேடியத் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

## பஞ்சாப்பில் இயல்புநிலை ஏற்படும் வரை ராணு. விலக்கப்படமாட்டாது

- சரத் பவார்

(பம்பாய்)

பஞ்சாப் மாநிலத்தில் இயல்பு நிலை ஏற்படாத வரையில் அம் மாநிலத்திலிருந்து பாதுகாப்பு படையினர் விலக்கிக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

பம்பாயில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில் ஜம்மு காஷ்மீர் மக்களிடையே படையினர் ஒரு பாதுகாப்பு உணர்வைத் தோற்றுவிப்பதாகவும், எல்லைக்கு அப்பாலிருந்து கிடைக்கும் உதவிகளை நிறுத்தியிருப்பதாகவும்தெரிவித்தார்.

அத்துடன் இராணுவத்தில், சிக்னல், கல்வி அணிவகுப்பு முதலான ஐந்து பிரிவுகளுக்கு பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதாகக் குறிப்பிட்டார்.

## வானதி கவிதை; அறிமுக விழா

(மாங்குளம்)

வானதியின் கவிதைத் தொகுதி அறிமுக விழா வட மராட்சிப் பிராந்தியத்தில் இன்று 3ஆம் திகதி முதல் அறிமுகம் செய்து வைக்கப் படவுள்ளது.

இவ்விழாவில் பிரிவு அரசியல் நிர்வாக பொறுப்பாளர் பிரிவு கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் மகளிர் முன்னணி உறுப்பினர்கள் மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (82)

## வரி விளம்பரம்

### பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சி 92-02-01-ல் ஆரம்பமாகி விட்டது க.பொ.த (சா/த) சித்தியடைந்தமை கடைசித்தகைமையாகும் நேரில்வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலாம் பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர் கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

(2151)

ஆண் தமிழ் தட்டெழுத்தாளர்

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றிற்கு ஆண் தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. தகுந்த ஆவணங்களுடன் 07-02-92 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குஈழநாதம் காரியாலயத்திற்கு வரவும், வேதனம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

(சி/3880)

## நினைவு கூருகின்றோம் 1992-02-03

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தம்பலகமம் பட்டிமேட்டில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள்

1989 ஆம் ஆண்டு முள்ளிக்குளத்தில் தற்செயலாகக் கைக்குண்டு வெடித்ததில் எம்மைப் பிரிந்த

**சின்ன ராஜேந்திரன்** (நாகசுந்தரம் சிறிபாலன்- பிரதானவீதி, மன்னார்)

1991 ஆம் ஆண்டு கிளாலியில் சிறிலங்காப்படையினரின் உலங்கு வானூர்தித்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**மதுமிதா** (பொன்மலர் பொன்னம்பலம் - 26 கோவிற்குளம், வவுனியா)

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கஜன்** (செபமாலைமுத்து ஜக்சன் - பலாலி தெற்கு, வயாவிளான்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3878)

# ஜெயலலிதாவின் தஞ்சை விஜயம்; 20,000 பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு

## இன்ஸ்பெக்டர் ஜெனரல் நேரில் கண்காணிப்பு

"தஞ்சை வரும் போது அதிகளவில் வாகனங்களைக் கூட்டிக்காட்ட வேண்டும். அதற்காக தஞ்சைமாவட்டம் முழுவதிலும் உள்ள கிராமத்திலிருந்தும் குறைந்த பட்சம் ஒரு வாகனமாவது வரவேண்டும்'' என்று தஞ்சை மாவட்டத்திற்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வருகை தந்த போது ஏற்பாடுகள் செய்ய அவ்வூர் கட்சித் தொண்டர்களுக்கும், மாவட்ட ஆட்சி அலுவலகத்திற்கும். வர்த்தக சங்கங்களுக்கும் ஆணையிடப்பட்டது.

இந்த ஒழுங்குகளை ஏற்பாடு செய்ய மாநில அமைச்சர்கள் தஞ்சைக்கு அனுப்பப்பட்டனர் அழகு திருநாவுக்கரசு, எஸ். டி. சோமசுந்தரம், முத்துசாமி, செங்கோட்டையன், கண்ணப்பன், செல்வ கணபதி ஆகிய ஆறு அமைச்சர்களும் முதல்வரால் அனுப்பப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பாதுகாப்பு ஒழுங்குகள்

இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம் ஐந்து நாட்களுக்கு முன்பே தஞ்சைக்கு வந்து முகாமிட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டார்.

இருபதாயிரம் பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். தஞ்சை அரசு சுற்றுலா மாளிகையில் முதல்வர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டதால் அதை ஒட்டியுள்ள வீடுகளின் கூப்பன் கார்டுகளைச் செக் செய்து குடும்பத்தினர் தவிர மற்றவர்களை பொலிசார் வெளியேற்றினர்.

தஞ்சை நகர லொட்ஜ்களில் புதிதாக அறை பதிவு செய்தவர்கள் அனைவரும் கட்டாயமாகக் காலி செய்யப்பட்டனர்.

விழாப் பந்தலின் நான்கு புறமும் காவலரண் அமைக்கப்பட்டு அதில் பொலிசார் பைனாகுலருடனும் துப்பாக்கியுடனும் நிறுத்தப்பட்டனர்.

மக்கள் ஒவ்வொருவராக சோதிக்கப்பட்டு விழாப்பந்தலினுள் அனுமதிக்கப்பட்டனர். பூமாலை, கமரா கொண்டுவர எவரும் அனுமதிக்கப்படவில்லை.

### போஸ்டர் ஒழுங்குகள்

தஞ்சைநகர் முழுவதுமே போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. தோரணங்கள், பேனர்கள் என கட்டாயமாக வசூலித்த பணத்தில் கட்டப்பட்டன என்றும், ஒட்டப்பட்ட போஸ்டர்களில் எல்லாமே ஜெயலலிதாவின் படம் மட்டும் தான் என்றும், பெயருக்குக் கூட எம். ஜி ஆரின் படம் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போஸ்டர்களில் ஜெயலலிதாவைப் புகழ அனைத்து தமிழ்ச் சொற்களும் பயன்படுத்தப்பட்டதாகவும் சிகரம் வைத்தாற் போல் "வருங்கால இந்தியப் பிரதமராக வாழ்த்துக்கள்'' என்றும் ஒட்டப்பட்டிருந்ததாம்.

இதனைவிட விழா மேடை அலங்காரத்திற்காக மட்டும் 30,000 ரூபாவை நகராட்சி மன்றம் செலவு செய்தது.



மேடையைச் சுற்றி வாசனைத் திரவியங்கள் தெளிப்பது; அதுவும் மல்லிகை மணம் பொருந்திய வாசனைத் திரவியங்களே தெளிக்கப்பட்டன. (ஏனைய திரவியம் தெளிக்கக் கூடாது என முதல்வரின் கட்டாய உத்தரவு)

இந்த ஏற்பாடுகள் குறித்து அ. தி. மு. க. தொண்டர் கருத்து வெளியிடும் போது "அம்மா ஒவ்வொரு விடயத்தையும் நன்றாகவே கவனிக்கிறார்'' என்று தெரிவித்தாராம்.

### கார் ஊர்வலம்

ஆயிரம் கார்கள் புடைசூழ முதல்வர் செல்வி ஜெயலலிதா விழா ஒழுங்கு மண்டபத்திற்கு வந்தார். இதற்காக ஆயுத பூசை விசேஷத்தில் இருந்த டாக்ஸி உரிமையாளர்களின் டாக்சிகள் பயன்படுத்தப்பட்டன.

ஜெயலலிதாவின் கார் பவனியை பார்க்க வந்த வெளியூர் பயணி ஒருவர் வீதியில் கல்தடுக்கி விழ, அவரது சட்டைப் பொக்கற்றுக்குள் இருந்து வெள்ளை மாத்திரைகள் விழுந்தன. இதனைப் பார்த்த பொலிசார் மாத்திரைகளை சயனைட்டு மாத்திரையோ என்று சந்தேகித்து ரத்தம் வரும்வரை அடித்த பின்னர் தான் மாத்திரையை பரிசோதித்த போது அது 'ஆஸ்த்மா' மாத்திரை என்று பொலிசாருக்கு தெரிய வந்ததாம்.

ஜெயலலிதாவின் வருகைக்காக விழா ஒழுங்குகளை மேற்கொண்ட போது கட்சித் தொண்டர்கள் ஒன்பது பேர் விபத்துக்களில் இறந்தனர். சராசரியாக முதல்வரின் கூட்டங்களை ஒழுங்கை செய்யும் போது ஒவ்வொரு கூட்டத்தின் போது ஐவர் மரணமடைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

# சைக்கிள் கொண்டுவர தடை; பயணிகள் அவதி

(வவுனியா)

வவுனியா நகரிலிருந்து வட பகுதிக்கு சைக்கிள் கொண்டு வருவதற்கு இராணுவம் தடை விதித்திருப்பதால் பயணிகள் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

சுமார் மூன்று மாதங்களாக இத்தடை நீடித்து வருகிறது.

வவுனியாவிலிருந்து நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியவர்கள் சைக்கிள் தடை காரணமாக பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

புதிய சைக்கிளோ அல்லது பழைய சைக்கிளோ வவுனியா நகரிலிருந்து கொண்டு வர முடியாது என்று இராணுவம் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# தற்காலிக ஆசிரியருக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கான தற்காலிகஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை நாலாம் திகதி அப்பகுதியிலுள்ள கொத்தணிப்பாடசாலைகளில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் தகுதியினை நிரூபிப்பதற்கான சகல பத்திரங்களுடன் ஆயத்தமாக வரும்படி கேட்கப்படுகின்றனர்.

---

தோட்டம் தனியார் மயமானால்

# வழக்காடும் உரிமை கூட தொழிலாளர் இழப்பர்

(இரத்தினபுரி)

வியாபார சுவீகரிப்பு மசோதாவின் (சட்டமூலத்தின்) கீழ் தோட்டங்கள்சுவீகரிக்கப்பட்டு தனியார் மயமாக்கப்பட்டால் தொழிலாளர்கள் வழக்காடும் உரிமையைக்கூட இழந்து விடுவார்கள் என சப்ரகமுவ மாகாணசபை உறுப்பினர் டேவிட் இராசையா தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழில் துறையை தனியார்மயப்படுத்தலை உடன் நிறுத்த வேண்டும் என சிறிலங்கா அரசை கோரும் பிரேரணை ஒன்றை மாகாண சபையில் பிரேரித்து பேசிய அவர் மேலும் கூறியதாவது:

சிறிலங்கா அரசுக்கு சொந்தமாகவுள்ள சுமார் 450தேயிலை இறப்பர் தோட்டங்களையும் 22 தனியார் கம்பனிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தோட்டங்கள் வியாபார சுவீகரிப்பு மசோதாவின் கீழ் சுவீகரிக்கப்பட்டால் தொழிலாளர்களின் நிலை பெரும் ஆபத்திலேயே முடியும். தொழிலாளர்கள் தொழில் காரியாலயத்திற்கோ தொழில் நீதி மன்றத்திற்கோ சென்று நீதி கேட்க முடியாது. தொழில் சட்டதிட்டப்படி கம்பனிக்கு எதிராக வழக்காடமுடியாது. அத்துடன் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.

அரசு என்னதான்வாக்குறுதிகளை அளித்தாலும்தோட்டங்களை தனியார் மயமாக்கல் மூலம் தொழிலாளர்களுக்கு நன்மை கிட்டாது என தெரிவித்தார்.

# ஊவா கொலை, கொள்ளை; 45பேர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

ஊவாமாகாணத்தில் இடம் பெற்ற கொள்ளை, கொலை தொடர்பாக பொலிசாரால் கைது செய்யப்பட்ட 45 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் 40 பேர் தடுப்பு முகாமிலும், ஐந்து பேர் பொலிஸ்காவலிலும் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றனர். இதில் மூவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் நாடு - மத்திய அரசு முரண்பாடு அதிகரிப்பு

(சென்னை)

தமிழக அரசிற்கும் மத்திய அரசிற்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் இதனை மேலும் நிரூபிப்பதாக உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னைக்கு வந்திருந்த மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் முதல்வர் ஜெயலலிதாவை கவர்னர் மாளிகையில் சந்திக்கும்படி கேட்டுக் கொண்ட போதும் சவான் டில்லி புறப்படும் வரை அவரை ஜெயலலிதா சந்திக்கவில்லை.

ஆனால் சவான் டில்லிக்குச் சென்ற பின்னர் தமிழக அரசு "முதல்வரை உள்துறை அமைச்சர் சந்திக்க முயற்சி எடுக்கவில்லை'' என முதல்வர் தரப்பில் அறிக்கை விட்டது.

அத்துடன் காவிரி தொடர்பாக இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் நரசிம்மராவை பற்றி தாக்கிப் பேசியபோது அதனை ஜெயலலிதா ஆதரித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# நியாய விலையில் குரக்கன் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் குரக்கன் முழுவதையும் நியாய விலையில தமிழீழ ஆய்வு நிறுவனம் கொள்வனவு செய்யுமென அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

சிறுபோகமாக யாழ். மாவட்டத்தில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் குரக்கன் முழுவதையும் அவற்றின் தரத்திற்கேற்ப கிலோ இருபத்தெட்டு ரூபா முதல் முப்பத்தைந்து ரூபா வரை கொள்வனவு செய்ய தமிழீழ ஆய்வு நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் விவசாயிகள் தமது குரக்கன்களை மேற்படி நிறுவனத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தை பெற்றுக் கொள்ளலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பவள விழாவும் மலர் வெளியீடும்

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய பவளவிழாவும் மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் திரு. எஸ். யோசுவா அறிவித்துள்ளார். (25)

# ஜெயலலிதா - ராமமூர்த்தி உறவில் விரிசல்

(சென்னை)

தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கும் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடிராமமூர்த்திக்கும் இடையில் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழகப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. இருதய அறுவைச்சிகிச்சை பெற்ற பின்னர் அமெரிக்காவிலிருந்து திரும்பிய வாழப்பாடி ராமமூர்த்தியை வரவேற்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தமிழக முதல்வரை அழைத்த போது அவர் அதனை தட்டிக்கழித்து விட்டு தஞ்சாவூருக்கு சென்றார் என்றும், தொலைபேசி வாயிலாகவும் அவரை ஜெயலலிதா நலம் விசாரிக்க வில்லையென்றும், தஞ்சாவூருக்குச் சென்று கொண்டிருந்த ஜெயலலிதா ராமமூர்த்தியை "காவிரியின் மைந்தன்'' என்று புகழ்ந்து ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களைப் பார்த்து எரிச்சலடைந்ததாகவும்சொல்லப்படுகிறது.

காவிரிநீர்ப் பிரச்சினை தொடர்பாக முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மூப்பனாரின் யோசனைகளும் ஏற்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போது ராமமூர்த்தி எழுந்து "நான் தான் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர். மூப்பனார் எப்படி கலந்து கொள்ளமுடியும்'' என்று கேட்டார்.

அத்துடன் ஜெயலலிதாவை கூட்டத்தில் பேசும்போதும் 'புரட்சித் தலைவி' என்றே குறிப்பிட்டுவந்த ராமமூர்த்தி இப்போது முதல்வர் என்றுமட்டுமே குறிப்பிடுகின்றார் என்றும் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

# நரசிம்மராவ் - வாழப்பாடி உறவுகள் சுமுக நிலையில்

இந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கும் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்திக்கும் இடையே இருந்த உறவு சுமுக நிலை அடைந்துள்ளதாக தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் ராமமூர்த்தி பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து அமைச்சர் பதவி குறித்துக் கதைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ராமமூர்த்தி குழுவினர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் நரசிம்மராவ் குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் அதனை ராமமூர்த்தி கண்டித்ததாகவும்,

அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு திரும்பிய ராமமூர்த்தியின் வரவேற்பு வைபவத்தில் பிரதமரின் பெரிய கட்-அவுட் வைக்கப்பட்டதென்றும்.

கூட்டத்தில் பிரதமரின் புதிய தொழிற் கொள்கைகளைப் பாராட்டி பேசினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய நிலைமைகள் இருவருக்கும் இடையில்உள்ள விரிசல் நிலை நீங்கி சுமுக நிலை ஏற்படுவதையே காட்டுகின்றன என்றும் அரசியல்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன

# கலந்துரையாடல்

யாழ். இந்து உயர்தர மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலையில் நடைபெற உள்ளது என கல்லூரி அதியர் அறிவித்துள்ளார். இதில் 91 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களைக் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகிறது.

# பிரேமதாசா


# எப்படிப்பட்ட மனிதர்?

ஜனாதிபதி பிரேமதாசா எப்படிப்பட்ட மனிதர்? அவரது அரசியல் பார்வையும் அணுகு முறையும் எவ்வகையானது? தமிழரின் இனப் பிரச்சினை குறித்து அவரது கண்ணோட்டம் என்ன? அவரது ஆட்சிக்காலத்தில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுமா? இன்று தமிழ் மக்களின் மனதை உறுத்தி வரும் கேள்விகள் இவை.

பிரேமதாசாவின் அந்தரங்க மனோவுலகத்தை இனம்கண்டு விமர்சிப்பது கடினம். ஏனென்றால் அவர் ஒரு முகமூடி மனிதர். காலத்திற்கு காலம், தேவைகளுக்கு ஏற்ப முகமூடிகளை அணிந்து நடிப்பவர். மிகவும் திறமாகநடிப்பவர். இளம் பராயத்தில் ஒரு கவிஞனாக எழுத்தாளனாக, சிறந்த பேச்சாளனாக அரசியலில் களம் புகுந்து, கொழும்பு நகரசபை உறுப்பினராக, எம். பி யாக, அமைச்சராக, பிரதமராக, ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறும்வரை அவர்ஏற்று நடித்த பாத்திரங்கள் பலவகையானவை. இந்த நீண்ட அரசியல் யாத்திரையில் எங்குமே இடர்ப்பட்டு விழாமல் மிகவும் சாணக்கியத்துடன், மிகவும் நுட்பமாக காய்களை நகர்த்தி அரசியல் சதுரங்க விளையாட்டில் வெற்றி கண்டவர். ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பாத்திரங்களையும் ஏற்றுநடிப்பதில் வித்தகர். ஒரு புறத்தில் ஆட்கடத்தல் அதிரடிப்படைகளின் தளபதியாகவும், மறுபுறத்தில் அன்பு மார்க்கத்தின் போதிசத்துவராசவும் வேடங்கள் பூணுவதில் விற்பன்னர். அவர் அணிந்த முகமூடிகளைக் கண்டு ஏமாந்தவர்கள் பலர். நம்பி நடந்து நட்டாற்றில் கை விடப்பட்டவர்கள் பலர் அரசியல் வாழ்விலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டவர்கள் பலர்.

சூறாவளிகள் சதா சீற்ற பெடுத்தாடும் அரசியல் கடலில் நெடுங்காலமாக படகோட்டியவர்என்பதால்எதார்த்த அரசியலின் கோரமான சுழிவு நெழிவுகளை பிரேமதாசா நன்கறிவார். அரசியல் என்பதே ஈவிரக்கமற்ற அதிகாரப் போட்டி என்பதும், குத்து வெட்டுக்கள் நிறைந்த போர்க்களம் என்பதும் அவருக்கு தெரியாததல்ல. ஆபத்துகள் நிறைந்த இந்த நீரோட்டத்தில் நிலைத்து நின்று நீச்சல் அடிப்பதென்றால் எதிரிகளைக் கையாளும் அபாரதிறன் வேண்டும். பிரேமதாசாவுக்கு இது கைவந்த கலை. ஒரு சாதாரண நாடகாசிரியரிலிருந்து பெரும் புரட்சி மன்னர்கள் வரை பிரேமதாசாவை எதிர்த்தவர்கள் மிகவும் மர்மமான சூழ்நிலையில் மரணத்தை சந்தித்திருக்கிறார்கள். இந்த வரிசையில், தடயம் எதுவும் இல்லாமலே பரிநிர்வாணம் பெற்றவர்கள் பலர். பிரேமதாசாவின் வாழ்க்கை வரலாற்றில்புதிர்கள் நிறைந்த துப்புத்துலக்க முடியாத, பல இருண்ட அத்தியாயங்கள் உண்டு.

நண்பன் என்றால் நண்பன், எதிரி என்றால் எதிரி என்ற வைராக்கியத்துடன் வாழ்க்கையை நடத்தும் பிரேமதாசாவுக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களில் பலர் தமிழர்கள். குறிப்பு பார்க்கும் சோதிடர்களிலிருந்து, கணக்குப் பார்க்கும் பண முதலைகள்வரை பல கொழும்புத் தமிழர்கள் பிரேமதாசாவின் நெருங்கிய வட்டத்து நண்பர்களாக இருந்து வருகிறார்கள். பிரேமதாசா சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொண்டவர். சகுனங்களுக்கும், சனி தோஷத்திற்கும், சூனியத்திற்கும் அஞ்சி நடப்பவர். திருமதி பண்டாரநாயக்காவை ஒரு சூன்யக்காரி என எண்ணுபவர். பிசாசுகளுக்கும் பில்லி சூன்யத்திற்கும் சனிபகவானின் சதிச்செயலுக்கும் அஞ்சி வாழும் பிரேமதாசாவுக்கு மந்திரவாதிகள் தேவைப்பட்டனர். மிகவும் அந்தரங்கமான மனக்குகை இரகசியங்களை பகிர்ந்து கொள்ளும் நம்பிக்கைக்குரிய ஆட்கள் தேவைப்பட்டார்கள். இந்த அந்தப்புரத்து விவகாரங்கள் அரசியல் உலகிற்கு அம்பலமாகக் கூடாது என்பதற்காக பிரேமதாசா தமிழர்களை தேர்ந்தெடுத்தார். சோதிட உலகத்து விவகாரத்தில் மட்டுமல்லாமல் கறுப்புப் பண விசயத்திலும் தமிழர்களே பிரேமதாசாவின் அந்தரங்க காரியதரிசிகளாக செயற்பட்டுவருகிறார்கள்முதல்லாளித்துவ பாதாள உலகில் கைமாறப்படும் பண முடிச்சுகளிலிருந்து திறைசேரி நிதி நிர்ணய விவகாரம்வரை தமிழர்களே பிரேமதாசாவின் கையாட்களாக கடமை செய்கிறார்கள். இவ்வாறு தமிழர்களை தனது அந்தரங்க கருமங்களுக்கு பயன்படுத்தி வரும் பிரேமதாசா தமிழரின் இனப் பிரச்சினையில் கொண்டிருக்கும் நிலைப்பாடு முற்றிலும் வித்தியாசமானது.



1983 ஜூலைக்கு முந்திய காலகட்டத்தில் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக பிரேமதாசா தனிப்பட்ட ரீதியில் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு தலையிடவில்லை. கிழட்டு நரி ஜே. ஆரின் நிழலுக்குள் மறைந்து நின்று கட்சியின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு இயங்கிவந்தார். ஜூலை கலவரத்தின் போது பிரேமதாசாவின் குண்டர் படையும் களத்தில் குதித்து கொழும்பில் தமிழர்களை தாக்கியதாக சொல்லப்படுகிறது. இதில ஓரளவுக்கு உண்மை இருக்கலாம். ஏனென்றால் ஜூலை கலவரத்தை திட்டமிட்டதும் செயற்படுத்தியதும் பச்சைச் சேட்டு கட்சிக்காரர்களே.

ஜூலை கலவரத்தை அடுத்து தமிழரின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டது. கிழட்டு நரியின் கொட்டத்தை அடக்க இந்திரா காந்தி அம்மையார் திட்டம் தீட்டினார். தமிழ்ப்போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்க முடிவெடுக்கப்பட்டது. தமிழர் பிரச்சினையில் இந்தியா குறுக்கிட்டதை பிரேமதாசாவால பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. இந்திரா காந்தி அம்மையாரை பாராளுமன்றத்தில் வைத்து பகிரங்கமாக திட்டினார். அம்மையாருக்கு இது பிடிக்கவில்லை. பிரேமதாசாவின் இந்திய துவேஷம் இரு நாடுகள் மத்தியிலான உறவைப் பாதிக்குமென எச்சரித்து ஜே. ஆருக்கு ஒரு காத்திரமான கடிதத்தை எழுதினார். இந்த மறைமுக மிரட்டலுக்கு பிரேமதாசா பணிந்துவிடவில்லை. தொடர்ந்து இந்திய எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினார். குடும்பச் சண்டையில் அயல் வீட்டுக்காரன் தலையிடக் கூடாது என இந்தியாவை சாடினார். இந்தியாவுக்கு எதிரான பிரேமதாசாவின் துணிச்சலான பிரகடனங்கள் அவரை ஒரு தீவிர சிங்களத் தேசாபிமானி என்ற அந்தஸ்திற்கு உயர்த்தியது சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் பிரேமதாசாவுக்கு பின்னால் அணிதிரண்டன. ஜே. ஆரின் வாரிசுக்கான அதிகாரப் போட்டியில் பிரேமதாசா முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டார். இந்தியாவின் ஆசியைப் பெற்றால் ஆட்சி பீடம் ஏறலாம் என எண்ணியிருந்த கண்டிய பிரபுத்துவ வர்க்கத்தினருக்கு பிரேமதாசாவின்நுட்பமான காய்நகர்த்தல்கள் புரியவில்லைப் போலும.

1987 ஜூலை. கொழும்பில் டிக்ஷிட்டின் இராஜதந்திர சாணக்கியம் கொடிகட்டிப் பறந்த காலம். வடக்கில் கரும்புலி மில்லர் எரிமலையாய் வெடித்ததால் ஒப்பரேசன் லிபரேசன் ஆட்டம் கண்டது. கிடுகிடுத்துப்போன கிழட்டு நரி டிக்ஷிட்டின் பொறிக்குள் விழுந்தது. தமிழ், சிங்கள மக்களின் இறைமைக்கு சாவுமணி அடிக்கும் அடிமை சாசனமாக ஒரு ஒப்பந்தம் தயாராகிறது. இந்த ஒப்பந்தம்மூலம் இலங்கையின் இறைமைக்கு பங்கம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, தமிழரின் சுதந்திர இயக்கத்திற்கு முடிவு கட்டிவிடலாமென திருப்தி கொள்கிறது ஜெயவர்த்தனா அரசு. ஆனால் பிரேமதாசா மட்டும் டிக்ஷிட்டின் இராஜதந்திர சூன்யத்திற்கு பலிக்கடா ஆகவிரும்பவில்லை. பூனைகளுக்கு அப்பத்தை பிரித்துக்காட்டிய குரங்கு போல இந்தியா இலங்கையின் உள்நாட்டுச் சண்டையில் தலையிடப்போவதாக எண்ணினார். ரஜீவ் காந்தி ஒரு புனிதமான பசு அல்ல என்பதை பிரேமதாசா அறிந்திருந்தார். இதனால் இந்த ஒப்பந்த விவகாரத்திலிருந்து ஒதுங்கிக்கொள்ள விரும்பினார் இந்திய நல்லுறவுக்கு மேலாக சிங்களத்தேசாபிமானத்தில் அரசியல் அனுகூலங்கள் நிறையவுண்டு என்பதை சரியாக எடைபோட்டார் போலும்.

பெரிய அரசியல் கொந்தளிப்புகள் மத்தியில் கொழும்பில் ஜே. ஆர் - ரஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது பிரேமதாசா அங்கிருக்கவில்லை. சிங்களத்தீவிரவாத இயக்கங்கள் ஜெயவர்த்தனாவை தேசத்துரோகி என வசைபாடி ஆர்ப்பரித்தபோது தேசாபிமானி பிரேமதாசா ஜப்பானில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

பிரேமதாசாவின் அரசியல் சதுரங்க ஆட்டத்தை புதுடில்லிப் பிராமணர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. பிரேமதாசா ஒரு இந்திய எதிர்ப்பாளர் என்பதை மட்டும் உணர்ந்திருந்தனர். ஆனால் பிரேமதாசா, ஜனாதிபதி ஆசனத்தை குறிவைத்து செயல்படுகிறார் என்பதையும் அதற்கு ஏற்றால் போல காய்களை நகர்த்திவரு

## பிரம்மஞானி

கிறார் என்பதையும் இந்திய ராஜதந்திரத்தால் கணிப்பிட முடியவில்லை. கண்டிய பிரபுத்துவ ஆளும் வர்க்கத்திலிருந்து ஆட்சி மாறப்போவதில்லைஎன இந்தியாகருதியது இந்த வர்க்கத்தின் ஏகபோக பிரதி நிதியாகவும், ஜே.ஆரின் வாரிசாகவும் காமினி பதவியேறலாம் என புதுடில்லி தப்புக் கணக்குப்போட்டது. இந்த மதிப்பீட்டிற்கு அமைய டில்லி ஆட்சிபீடம் காமனியுடன் நட்புறவை வளர்த்து பிரேமதாசாவை ஒதுக்கியது. இந்தியாவை பகைத்துக் கொள்வதையிட்டு பிரேமதாசா கவலைப்படவில்லை. இலங்கையின் அரசியல் சக்கரத்தை சுழற்றுவது இந்திய பிராமணிய தந்திரம் அல்ல, சிங்கள தேசியவாதமந்திரம்தான் என்பதை பிரேமதாசா நன்கறிவார். இதனால், காமினி டில்லியின் அதிகாரமாளிகைக்குச் சென்று ராஜீவின் ஆசிபெற்றபோது, பிரேமதாசா கண்டியின் தலதா மாளிகைக்குச் சென்று மகாதேரர்களை வழிபட்டார். பௌத்த பீடத்தின் ஆசிபெற்ற சிங்களத் தேசபக்தர் என்ற பாத்திரத்தை சிறப்பாக நடித்ததால் சிங்கள முதலாளியத்தின்முதுகெலும்பான ஐக்கிய தேசிய கட்சி தனது நீண்டகாலவரலாற்றில் முதன் முதலாக ஒரு பாட்டாளி மகனை தலைவனாக தெரிவு செய்தது. இந்த நிகழ்வு பிரேமதாசாவின் சூத்திரதார அரசியலுக்கு மகுடம் வைப்பதாக அமைந்தது. அடுத்த கட்டமாக பிரேமதாசா ஜனாதிபதியாக பதவி ஏறினார். தீவிர இந்திய எதிர்ப்பாளர் ஒருவரோடு அரசியல் வர்த்தகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் இந்தியா தள்ளப்பட்டது.

(தொடரும்)

# மருதநாயகத்தைபிணையில் விட நீதிபதி உத்தரவு

பத்மநாபா கொலை வழக்கில் பத்தேனழாவது எதிரியாக குற்றஞ் சாட்டப்பட்ட திருச்சியினைச் சேர்ந்த சட்டத்தரணி ரி.வி. மருதநாயகத்தை பிணையில் செல்ல விடுமாறு விசேட நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்தீக் உத்தரவிட்டுள்ளார்.

இதே வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட இன்னொரு சட்டத்தரணியான டி வீரசேகரனை பிணையில் செல்ல மேல் நீதிமன்றம் அனுமதிக்

இவர்கள் இருவருமே சட்டத்தரணிகள். அத்துடன் இவர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவியளித்ததாகவே குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். எதிர்கால நடவடிக்கை தொடர்பாக சாந்தனுக்கு வீரசேகரன் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இது அவரது தொழில் சார்பான தெரிவிப்பு என்றே வர்ணிக்கப்பட்டது.

மருத நாயகமும் விக்கி

# தொழில்நுட்ப கருத்தரங்கு

(பருத்தித்துறை)

அன்னைபூபதி தேர்வுக்கான அரசியல், விஞ்ஞான, தொழில் நுட்பம் பற்றிய கருத்தரங்கு அச்சுவேலி கொத்தணி உட்பட வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளில்விஞ்ஞானம், சமூகக்கல்வி, தமிழ் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் 03. 02. 1992 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் விஞ்ஞா

ஐ. நா. பா. சபையில்

# சீனாவும் இந்தியாவும் ஒத்த கருத்தை தெரிவித்தது - லீபெங்

(நியூயோர்க்)

சீனாவும், இந்தியாவும் எல்லைப் பிரச்சினைகளை விரைவில் தீர்த்துக் கொள்ள தேவைப்படுமேயானால் அரசியல் நோக்கு ஒன்றை அளிப்பதற்கு இந்திய சீனப் பிரதமர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.


குறைக்க இருதரப்பிலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டதோடு, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் அனுமதி பேணப்பட வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளனர்.

மேலும் ஐ. நா பாதுகாப்பு சபை உறுப்பு நாடுகளின் உச்சி

எழுத்தாளனாக, சிறந்த பேச்சாளனாக அரசியலில் களம் புகுந்து, கொழும்பு நகரசபை உறுப்பினராக, எம்.பியாக, அமைச்சராக, பிரதமராக, ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறும்வரை அவர்ஏற்று நடித்த பாத்திரங்கள் பலவகையானவை. இந்த நீண்ட அரசியல் யாத்திரையில் எங்குமே இடர்ப்பட்டு விழாமல் மிகவும் சாணக்கியத்துடன், மிகவும் நுட்பமாக காய்களை நகர்த்தி அரசியல் சதுரங்க விளையாட்டில் வெற்றி கண்டவர். ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பாத்திரங்களையும் ஏற்றுநடிப்பதில் வித்தகர். ஒரு புறத்தில் ஆட்கடத்தல் அதிரடிப்படைகளின் தளபதியாகவும், மறுபுறத்தில் அன்பு மார்க்கத்தின் போதிசத்துவராகவும் வேடங்கள் பூணுவதில் விற்பன்னர். அவர் அணிந்த முகமூடிகளைக் கண்டு ஏமாந்தவர்கள் பலர். நம்பி நடந்து நட்டாற்றில் கைவிடப்பட்டவர்கள் பலர் அரசியல் வாழ்விலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டவர்கள் பலர்.

சூறாவளிகள் சதா சீற்றமெடுத்தாடும் அரசியல் கடலில் நெடுங்காலமாக படகோட்டியவர்என்பதால்எதார்த்த அரசியலின் கோரமான சுழிவு நெழிவுகளை பிரேமதாசா நன்கறிவார். அரசியல் என்பதே ஈவிரக்கமற்ற அதிகாரப் போட்டி என்பதும், குத்து வெட்டுக்கள் நிறைந்த போர்க்களம் என்பதும் அவருக்கு தெரியாததல்ல. ஆபத்துகள் நிறைந்த இந்த நீரோட்டத்தில் நிலைத்து நின்று நீச்சல் அடிப்பதென்றால் எதிரிகளைக் கையாளும் அபாரதிறன் வேண்டும். பிரேமதாசாவுக்கு இது கைவந்த கலை. ஒரு சாதாரண நாடகாசிரியரிலிருந்து பெரும் புரட்சி மன்னர்கள் வரை பிரேமதாசாவை எதிர்த்தவர்கள் மிகவும் மர்மமான சூழ்நிலையில் மரணத்தை சந்தித்திருக்கிறார்கள். இந்த வரிசையில், தடயம் எதுவும் இல்லாமலே பரிநிர்வாணம் பெற்றவர்கள் பலர். பிரேமதாசாவின் வாழ்க்கை வரலாற்றில்புதிர்கள் நிறைந்த துப்புத்துலக்க முடியாத, பல இருண்ட அத்தியாயங்கள் உண்டு,

நண்பன் என்றால் நண்பன்,



வருகிறார்கள். பிரேமதாசா சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொண்டவர். சகுனங்களுக்கும், சனி தோஷத்திற்கும், சூனியத்திற்கும் அஞ்சி நடப்பவர். திருமதி பண்டாரநாயக்காவை ஒரு சூன்யக்காரி என எண்ணுபவர். பிசாசுகளுக்கும் பில்லி சூனியத்திற்கும் சனிபகவானின் சதிச்செயலுக்கும் அஞ்சி வாழும் பிரேமதாசாவுக்கு மந்திரவாதிகள் தேவைப்பட்டனர். மிகவும் அந்தரங்கமான மனக்குகை இரகசியங்களை பகிர்ந்து கொள்ளும் நம்பிக்கைக்குரிய ஆட்கள் தேவைப்பட்டார்கள். இந்த அந்தப்புரத்து விவகாரங்கள் அரசியல் உலகிற்கு அம்பலமாகக் கூடாது என்பதற்காக பிரேமதாசா தமிழர்களை தேர்ந்தெடுத்தார். சோதிட

1983 ஜூலைக்கு முந்திய காலகட்டத்தில் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக பிரேமதாசா தனிப்பட்ட ரீதியில் குறிப்பிட்டுச் சொல்லுமளவிறகு தலையிடவில்லை. கிழட்டு நரி ஜே.ஆரின் நிழலுக்குள் மறைந்து நின்று கட்சியின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு இயங்கிவந்தார். ஜூலை கலவரத்தின் போது பிரேமதாசாவின் குண்டர் படையும் களத்தில் குதித்து கொழும்பில் தமிழர்களை தாக்கியதாக சொல்லப்படுகிறது. இதில ஓரளவுக்கு உண்மை இருக்கலாம். ஏனென்றால் ஜூலை கலவரத்தை திட்டமிட்டதும் செயற்படுத்தியதும் பச்சைச் சேட்டு கட்சிககாரர்களே.

ஜூலை கலவரத்தை அடுத்து தமிழரின் இனப்பிரச்

கடிதத்தை எழுதினார். இந்த மறைமுக மிரட்டலுக்கு பிரேமதாசா பணிந்துவிடவில்லை. தொடர்ந்து இந்திய எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினார். குடும்பச் சண்டையில் அயல் வீட்டுக்காரன் தலையிடக் கூடாது என இந்தியாவை சாடினார். இந்தியாவுக்கு எதிரான பிரேமதாசாவின் துணிச்சலான பிரகடனங்கள் அவரை ஒரு தீவிர சிங்களத் தேசாபிமானி என்ற அந்தஸ்திற்கு உயர்த்தியது சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் பிரேமதாசாவுக்கு பின்னால் அணிதிரண்டன. ஜே.ஆரின் வாரிசுக்கான அதிகாரப் போட்டியில் பிரேமதாசா முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டார். இந்தியாவின் ஆசியைப் பெற்றால் ஆட்சி பீடம் ஏறலாம் என எண்ணியிருந்த கண்டிய பிரபுத்துவ வர்க்கத்தினருக்கு பிரேமதாசாவின்நுட்பமான காய்நகர்த்தல்கள் புரியவில்லைப் போலும்.

1987 ஜூலை. கொழும்பில் டிக்ஷிட்டின் இராஜதந்திர சாணக்கியம் கொடிகட்டிப் பறந்த காலம். வடக்கில் கரும்புலி மில்லர் எரிமலையாய் வெடித்ததால் ஒப்பரேசன் லிபரேசன் ஆட்டம் கண்டது. கிடுகிடுத்துப்போன கிழட்டு நரி டிக்ஷிட்டின் பொறிக்குள் விழுந்தது. தமிழ், சிங்கள மக்களின் இறைமைக்கு சாவுமணி அடிக்கும் அடிமை சாசனமாக ஒரு ஒப்பந்தம் தயாராகிறது. இந்த ஒப்பந்தம்மூலம் இலங்கையின் இறைமைக்கு பங்கம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, தமிழரின் சுதந்திர இயக்கத்திற்கு முடிவு கட்டிவிடலாமென திருப்தி கொள்கிறது ஜெயவர்த்தனா அரசு. ஆனால் பிரேமதாசா மட்டும் டிக்ஷிட்டின் இராஜதந்திர சூன்யத்திற்கு பலிக்கடா ஆகவிரும்பவில்லை. பூனைகளுக்கு அப்பத்தை பிரித்துக்காட்டிய குரங்கு போல இந்தியா இலங்கையின் உள்நாட்டுச் சண்டையில் தலையிடப்போவதாக எண்ணினார். ரஜீவ் காந்தி ஒரு புனிதமான பசு அல்ல என்பதை பிரேமதாசா அறிந்திருந்தார். இதனால் இந்த ஒப்பந்த விவகாரத்திலிருந்து ஒதுங்கிக்கொள்ள விரும்பி

ஜனாதிபதி ஆசனத்தை குறிவைத்து செயல்படுகிறார் என்பதையும் அதற்கு ஏற்றால்போல காய்களை நகர்த்திவரு

**பிரம்மஞானி**

கிறார் என்பதையும் இந்திய ராஜதந்திரத்தால் கணிப்பிட முடியவில்லை. கண்டிய பிரபுத்துவ ஆளும் வர்க்கத்திலிருந்து ஆட்சி மாறப்போவதில்லைஎன இந்தியாகருதியது இந்த வர்க்கத்தின் ஏகபோக பிரதிநிதியாகவும், ஜே.ஆரின் வாரிசாகவும் காமினி பதவியேறலாம் என புதுடில்லி தப்புக் கணக்குப்போட்டது. இந்த மதிப்பீட்டிற்கு அமைய டில்லி ஆட்சிபீடம் காமனியுடன் நட்புறவை வளர்த்து பிரேமதாசாவை ஒதுக்கியது. இந்தியாவை பகைத்துக் கொள்வதையிட்டு பிரேமதாசா கவலைப்படவில்லை. இலங்கையின் அரசியல் சக்கரத்தை சுழற்றுவது இந்திய பிராமணிய தந்திரம் அல்ல, சிங்கள தேசியவாதமந்திரம்தான் என்பதை பிரேமதாசா நன்கறிவார். இதனால், காமினி டில்லியின் அதிகாரமாளிகைக்குச் சென்று ராஜீவின் ஆசிபெற்றபோது, பிரேமதாசா கண்டியின் தலதா மாளிகைக்குச் சென்று மகாதேரர்களை வழிபட்டார். பௌத்த பீடத்தின் ஆசிபெற்ற சிங்களத் தேசபக்தர் என்ற பாத்திரத்தை சிறப்பாக நடித்ததால் சிங்கள முதலாளியத்தின்முதுகெலும்பான ஐக்கிய தேசிய கட்சி தனது நீண்டகாலவரலாற்றில் முதன் முதலாக ஒரு பாட்டாளி மகனை தலைவனாக தெரிவு செய்தது. இந்த நிகழ்வு பிரேமதாசாவின் சூத்திரதார அரசியலுக்கு மகுடம் வைப்பதாக அமைந்தது. அடுத்த கட்டமாக பிரேமதாசா ஜனாதிபதியாக பதவி ஏறினார். தீவிர இந்திய எதிர்ப்பாளர் ஒருவரோடு அரசியல் வர்த்தகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் இந்தியா தள்ளப்பட்டது.

(தொடரும்)

# மருதநாயகத்தைபிணையில் விட நீதிபதி உத்தரவு

பத்மநாபா கொலை வழக்கில் பத்னேழாவது எதிரியாக குற்றஞ் சாட்டப்பட்ட திருச்சியினைச் சேர்ந்த சட்டத்தரணி ரி.வி. மருதநாயகத்தை பிணையில் செல்ல விடுமாறு விசேட நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்தீக் உத்தரவிட்டுள்ளார்.

இதே வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட இன்னொரு சட்டத்தரணியான டி வீரசேகரனை பிணையில் செல்ல மேல் நீதிமன்றம் அனுமதித்தமை மருதநாயகம் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவுக்கு சாதகமானதாக இருககிறது என்றும் சித்தீக் தெரிவித்தார்.

இவர்கள் இருவருமே சட்டத்தரணிகள். அத்துடன் இவர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவியளித்ததாகவே குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். எதிர்கால நடவடிக்கை தொடர்பாக சாந்தனுக்கு வீரசேகரன் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இது அவரது தொழில் சார்பான தெரிவிப்பு என்றே வர்ணிக்கப்பட்டது.

மருத நாயகமும் விக்கி என்ற விக்கினேஸ்வரனுக்கு வீட்டை பெற்றுக் கொடுத்திருக்கிறார். இதையும் தொழில் சார்பான சேவை என வர்ணிக்க முடியும் என்றும் நீதிபதி சித்திக் குறிப்பிட்டார்.

# தொழில்நுட்ப கருத்தரங்கு

(பருத்தித்துறை)

அன்னைபூபதி தேர்வுக்கான அரசியல், விஞ்ஞான, தொழில் நுட்பம் பற்றிய கருத்தரங்கு அச்சுவேலி கொத்தணி உட்பட வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளில்விஞ்ஞானம், சமூகக்கல்வி, தமிழ் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் 03. 02. 1992 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் விஞ்ஞானம, சமூகக்கல்வி, தமிழ்ப்பாட ஆசிரியர்கள் தவறாது பங்கு கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி அரசியல் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

(25)

ஐ. நா. பா. சபையில்

# சீனாவும் இந்தியாவும் ஒத்த கருத்தை தெரிவித்தது

(நியூயோர்க்)

- லீபெங்

சீனாவும், இந்தியாவும் எல்லைப் பிரச்சினைகளை விரைவில் தீர்த்துக் கொள்ள தேவைப்படுமேயானால் அரசியல் நோக்கு ஒன்றை அளிப்பதற்கு இந்திய சீனப் பிரதமர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு நடத்திய சீனப் பிரதமர் லீபெங், இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ஆகியோர் கருத்து வேறுபாடுகளைத் குறைக்க இருதரப்பிலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டதோடு, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் அனுமதி பேணப்பட வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளனர்.

மேலும் ஐ. நா பாதுகாப்பு சபை உறுப்பு நாடுகளின் உச்சி மாநாட்டின் போது சீனாவும், இந்தியாவும் ஒத்த கருத்துக்களைத் தெரிவித்ததாக சீனப் பிரதமர் லீபெங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### சிந்தனைக்கு

காரியம் ஆகுமட்டும் காலைப் பிடிப்பவன்
காரியம் ஆனபின் குடுமியைப் பிடிப்பான்,

— தமிழ்ப்பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 03-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# மனித உரிமை மீறல்கள்; மௌனம் சிலநாட்களே

உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து தான் எதிர்பார்க்கும் உதவியைப் பெறுவதற்காகச் சிறிலங்கா அரசாங்கம் தனது முழு குணாம்சங்களையும் மூடி மறைத்து பெரும் பொறுமை ஒன்றைக் கடைப்பிடித்து வருகின்றது. கடந்த வருடம் கிடைக்க வேண்டிய நிதி உதவி இவ்வருடத்திலும் கிடைக்காது போனால் அரசாங்கம் எதுவும் செய்ய முடியாமல் போய்விடும் என்ற நிலையிலேயே இப் பொறுமை கடைப்பிடிக்கப் படுகின்றது. இதற்காக அரசிற்கு விசுவாசமாகத் தொண்டு செய்தவர்களையும், அரசாங்கத்தின் ஏவலில் வேலை செய்தவர்களையும் கூட சிறிலங்கா ஜனாதிபதி புறந்தள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பிரேமதாசா அரசாங்கத்தை ஜே. வி. பி யிடம் இருந்து காப்பாற்றியதில் பெரும் பங்கு வகித்தவர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல. அதற்காக அவர் தனது குடும்பத்தையும் பறிகொடுத்தார். ஜே. வி. பி. யிடம் இருந்து மட்டும் அவர் பிரேமதாசா அரசைப் பாதுகாக்கவில்லை; கொழும்பில் இருந்த பிரேமதாசா எதிர்ப்புச் சக்திகளையும் ஒடுக்குவதில் அவர் பெரும் உதவி செய்தார். ஆனால், தற்பொழுது நெருக்கடியின் உச்சத்தில் பிரேமதாசா அவரைக் கட்டாய லீவில் வீட்டிற்கு அனுப்பியுள்ளதோடு சிறிலங்காவில் நிகழ்ந்த படுகொலைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்குமான பழியை அவர் தலையிலும் சுமத்தியுள்ளார்.

இதேபோன்றே, கிழக்கில் சிறிலங்கா அரசாங்கத்தினால், திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலைக்கு ஏவல் வேலை செய்த இராணுவத்தினர் மீது அரசாங்கம் பழியைப் போட்டுக் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றது. கொக்கட்டிச்சோலைப் படுகொலை விசாரணை இதனையே சுட்டிக்காட்டுவதாகவுள்ளது இராணுவத்தினருக்கு சட்டத்தில் உள்ள ஓட்டைகள் மூலம்அரசாங்கம் பாதுகாப்பு வழங்கினும், பழியை இராணுவத்தினரின் மீது சுமத்தியுள்ளது.

இதேவேளை, காலவரையின்றி, விசாரணைகளோ, குற்றச்சாட்டோ இன்றி இராணுவ முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப் பட்டுள்ள கைதிகளின் ஒருபகுதியைப் பார்வையிடுவதற்கும் அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றிற்கு மேலாக சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களின் குற்றச்சாட்டுக்கள், ஐ நா. மனித உரிமை ஸ்தாபனங்களின் குற்றச்சாட்டுக்கள், கண்டனங்கள் என்பனவற்றையும் ஓரளவு பொறுமையாகக் கேட்டுக் கொண்டும் இருக்கின்றது. 'மனித உரிமை ஸ்தாபனங்களின் சிபார்சுகள் சிலவற்றை அமுல்படுத்துவதாகவும் சிறிலங்கா அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஆனால் இது எதுவரை? எவ்வளவு தூரம் சிறிலங்கா அரசாங்கத்தால் அமைதியாக இருக்க முடியும்? நடவடிக்கை எடுக்க முடியும்? சர்வதேச மனித உரிமை ஸ்தாபனத்தை ஒரு பயங்கரவாதிகளின் ஸ்தாபனம் என வர்ணித்த சிறிலங்கா அமைச்சரவையினால் மனித உரிமை ஸ்தாபனங்களின் சிபார்சுகளை நடைமுறைப் படுத்த முடியுமா? அவ்வாறு நடைமுறைப்படுத்தும் பலம் சிறிலங்கா அரசாங்கத்திடம் உள்ளதா?

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த மௌனம் இம் மாதம் ஏழாம்திகதி வரையுமே சாத்தியமானதாகும். மௌனம் கலையும் போது பேரினவாதக் கூச்சலே வெளிவரும். சிறிலங்கா அரசாங்கம் விரும்பியோ விரும்பாமலோ அது தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது. பௌத்தப் பேரினவாதமும், அதனுடன் இணையாக உள்ள இராணுவமும், பேரினவாதப் பத்திரிகைகளும் இவற்றைப் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. இதனைக் கனேடிய மனிதஉரிமைக் குழுவிற்கு சிங்களப் பேரினவாதக் குழுவிடம் இருந்து கிடைத்த வரவேற்புக்களில் இருந்தே புரிந்து கொள்ளலாம். மனித உரிமைகள் பற்றிப் பேசியமைக்காக கனேடியக்குழு பேரினவாத சக்திகளின் பெரும் கண்டனத்திற்கு உள்ளாகியது. இந்நிலையில்,மனித உரிமைகள் குறித்து சிறிலங்காவின் மௌனம் தணிய இன்னும் சில தினங்களே உள்ளன என்பதே உண்மை.

# அமெரிக்காவும் ரஷ்யாவும் இனிமேல் எதிரிகளல்ல

## காம்ப்டேவிட் தீர்மானம்

(வாஷிங்டன்)

ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சினுக்கு அமெரிக்க அதிபர்ஜோர்ஸ்புஷ் இரண்டு கடசோக் கவ் போய் துப்பாக்கிகளை அன்பளிப்பு செய்தார் ரஷ்ய அதிபர் யெல்சின் நேற்று முன் தினம் தமது அறுபத்தோராவது பிறந்த தினத்தை வாஷிங்டனில் கொண்டாடிய போது அமெரிக்க அதிபர் புஷ் இந்தப் பரிசுப் பொருள்களை அன்பளிப்புச் செய்தார்.

இதேவேளை அமெரிக்காவும், ரஷ்யாவும் இனி மேலும் ஒருவருக்கு ஒருவர் எதிரிகள் அல்ல என்று காம்ப்டேவிட் பேச்சுக்களை முடித்தபின்னர் வெளியீட்ட கூட்டுப் பிரகடனமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

## துருக்கியில் பனி காரணமாக நூறு பேர் பலி

(அங்காரா)

துருக்கியில் கொட்டும் பனி காரணமாக சுமார் நூறுக்கும் அதிகமானோர் கொல்லப் பட்டுள்ளனர். மேலும் சுமார் இருநூறுக்கும் அதிகமானோர் கொட்டும் பனிக்குள் சிக்குண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

துருக்கியின் பல கிராமங்களும் கொட்டும் பனி காரணமாக போக்குவரத்து மற்றும் தொடர்புகள் தலைநகரிலிருந்து நேற்று முதல் துண்டிக் கப்பட்டுள்ளது.

## பஞ்சாப் தேர்தலில் பலமுக்கிய அர. தலைவர்கள் போட்டியிட முடிவு

(டில்லி)

பஞ்சாப்பிலுள்ள பதின்மூன்று லோக்சபா தொகுதிகளிலும், நூற்றுப் பதினேழு சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் நடைபெறவிருக்கும் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வது நேற்று முன்தினம் கடைசி நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தேர்தல்களில் போட்டியிட பல முக்கிய அரசியல் தலைவர்கள் முன் வந்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது. லோக்சபாவிற்கு நூற்றுப் பத்து வேட்பாளர்களும், சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஆயிரத்து நூற்றி ஐந்து வேட்பாளர்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர் என்று அம் மநிலத் தலைமைதேர்தல்அதிகாரி கூறியுள்ளார்.

இம் மாதம் பத்தொன்பதாம் திகதி பஞ்சாப்பில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

## தீவக ஊழியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த அரச, மற்றும் அரச சார்பற்ற ஊழியர்கள் சங்கத்தின் கூட்டம் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு யழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (க)

## 41.1 மில்லி·டாலர் உதவி சிறிலங்காஅமெ.கோருகிறது

அமெரிக்காவிடமிருந்து சிறிலங்கா 1992 - நிதியாண்டிற்கு 41.1 மிலலியன் டாலர்களை உதவியாக கேட்டுள்ளதாக அமெரிக்க ராஜாங்க திணைக்களம்தெரிவித்துள்ளது 2இதில் 19.3 மில்லியன் டாலர்கள் அபிவிருத்திக்கு எனவும் 21 6 மில்லியன் டாலர்கள் உணவிற்கான உதவியாகவு்2இலட்சம் டாலர்கள்இராணுவ பயிற்சிக்கானஉதவியாகவும்இதில் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1991 நிதியாண்டில் அமெரிக்கா சிறிலங்காவிற்கு 51. 1 மில்லியன் டாலர்களை உதவியாக வழங்கியிருந்தது. இதே வேளை 1991 நிதியாண்டில் உலக வங்கி மூலமும், ஆசிய அபிவிருத்தி வங்கி மூலமும் ஏப்பிரல் தொடக்கம் யூன் வரையான மூன்றுமாதங்களில் 221 மில்லியன் டாலர்களை கடனாக வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தனியார் மயமாக்கலே சீரழிவைத் தடுக்க வழி

(கொழும்பு)

பொருளாதாரச் சீரழிவு பெருந்தோட்டத் துறைக்கும் ஏற்படாது தடுக்க, பெருந்தோட்டத்துறையை தனியார் மயப்படுத்துவதுதான் ஒரே ஒரு வழி என்று பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரூபா கருணத்திலக்க தெரிவித்துள்ளார்.

தனியார் மயப்படுத்தப் பட்ட பின்னர் தோட்டங்களில் 51 சதவீத மானவை உள்ளூர் கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வோதயத் தலைவரின் பாதயாத்திரை

(கொழும்பு)

சர்வோதய சிரமதான சங்கத்தின் அரசியல் பிரவேச ஞாபகார்த்தமாக அதன் தலைவர் ஏ. ரி. ஆரியரெட்ணா பாதயாத்திரை ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளார்.

ஆரியரெட்ணா மேற்கொள்ளவிருக்கும் பாதயாத்திரைக்கு சர்வோதயா வட்டாரங்களில் எதிர்ப்புக் கிளம்பியிருப்பதாக தெரியவருகிறது. சர்வோதயத்தின் தலைமைப் பீடத்தை ஆரியரெட்ணாவின் உறவினர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும், சர்வோதயம் அரசியலில் நுழைந்ததை ஆட்சேபித்தும் பல மூத்த உறுபினர்கள் சர்வோதயத்தைப புறக்கணிப்பு செய்வதாகவும் சொல்லபடுகிறது பிரபல பத்திரிகையாளர் குணதாஸலியனகே சர்வோதயத்தில் நிலவும் ஊழல்களை அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து சர்வோதய இயக்கம் ஆட்டம் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

சர்வோதயத்துக்கு நிதி மற்றும் உதவிகள் வழங்கும் சர்வதேச, உள்ளூர் நிறுவனங்கள் சர்வோதயத்தின் சமீபத்திய அரசியல் பிரவேசம் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளன.

### வெகுஜன

டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடமராட்சி, வலிகாமம் மேற்கு, தீவகம் நல்லூர், கோப்பாய், தென்மராட்சி மக்கள் ஊர்வலமாக வந்து நல்லூர் கந்தசாமிகோயில் முன்றலில் ஒன்று கூடுவார்கள். காலை 9.30 மணிக்கு ஊர்வலமாகக் கோயில் வீதிவழியாக யாழ். செயலகத்தை வந்தடைவார்கள்.

யாழ்.கடலோரப் பகுதிகளான கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர், நாவாந்துறை மககள் குருநகர் சேமக் காலைச் சந்தியில் ஒன்றுதிரண்டு ஊர்வலமாகச் செயலகம் வந்தடைவார்கள்.

யாழ்ப்பாண நகரப் பகுதி மக்கள் அன்று காலை 8மணியளவில் செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடுவார்கள். தொடர்ந்தாற்போல் எல்லோரும் ஒன்றிணைந்து யாழ் அரச செயலகம்முன்பாக மறியல் போராட்டம் நடாத்தி பிற்பகல் 1 மணிக்கு அரச அதிபரிடம் மகஜரைக்கையளிப்பார்கள் என்று வெகுஜனப்போராட்டக்குழுவின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

அன்றையதினம் பாடசாலைகள் வழமைபோல் இயங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### சிறிலங்கா

யுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்தினா மேலும்கூறுகையில் சரணடையக் கோரப்பட்டுள்ள பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோரை ஒப்படைக்குமாறு இந்தியஅரசு சிறிலங்காவிடம் இதுவரை வேண்டுகோள் விடுக்கவில்லை எனவும், வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அதனை அரசாங்கம் கருத்தில்கொள்ளும் எனவும் குறிப்பிட்டார்.

### 80 கோடி

இராணுவச் செலவினங்கள், அகதிப் பராமரிப்புச் செலவினங்கள் ஆகியவற்றின் காரணத்தால் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை குறிக்கப் பட்ட இலக்கு மட்டத்தில் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

### விடுதலைப்

கிறது. அத்தோடு, பல படையினர் சடலங்கள் மீட்க முடியாத அளவில் சிதைவுற்று விட்டதாகவும், பல சடலங்களைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இக்குண்டு வெடிப்பின் போது 150 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தற்பொழுது தெரியவருகின்றது.

### மீனவர்

சேதமடைந்தன. கடந்த இரு தினங்களாக இரவு வேளையில் இப்பகுதியில் கடற்படையினரின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. (82)

### எறிகணைத்

சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பரந்தன் பகுதியில் பல வீடுகள் சேதம் அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# அரசுசமாதானத்தைவிரும்பவில்லை போருக்குத் தயாராகி வருகின்றது

## எதிர்த்துப் போராடத் தயாராகுங்கள் — பரா

(யாழ்ப்பாணம்)

''சிறிலங்கா அரசும்,சிங்கள இராணுவமும் சமாதானத்தை விரும்பவில்லை. தமிழ்மக்கள் மீது பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே தயார் செய்து வருகின்றனர். இது வரை காலமும் சமாதானம் என்று கூறி அரசினால் மேற்கொள்ளப்பட்டு வந்த கபட நாடகம் தற்பொழுது அம்பலமாகியுள்ளது'' இவ்வாறு நேற்று புன்னாலைக் கட்டுவன் மத்தவோடை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பிரமுகர் திரு. பரா உரையாற்றும் போது கூறினார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

இன்று தமிழ் மக்களாகிய நாம் வாழ்வா சாவா என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். குடாநாட்டு பகுதிக்குள் இராணுவத்தை உள்ளே விடுவோமாக இருந்தால் நாங்கள் படித்த பாடசாலை, நாங்கள் உலாவிய பாதைகள், வீடுகள், எமது உடைமைகள் அனைத்தையும் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து விடும். இதை நாம் தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும்.

இதில் வயது வேறுபாடு இன்றி சிறியவர்கள், பெரியவர்கள் எல்லோரும் ஒருங்கிணைய வேண்டும். எதிரியின் இராணுவ நடவடிக்கை அதிகரிக்கப்படும்போது சிலர் உதவி செய்ய நினைத்தாலும் செய்ய முடியாதிருக்கும். வெள்ளம் வருமுன்பே அணைகட்ட வேண்டும் என்பதுபோல் நாமும் இப்போதிருந்தே போராட்டத்திற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் தங்கள் அங்கத்தவர்களை இணைத்து பின்வரும் வேலைகளுக்கு தயார்படுத்த வேண்டும். காவலரண்களை அமைப்பதற்கு பதுங்குகுழி வெட்டுதல், பொது இடங்களில் மக்களின் பாதுகாப்பிற்கு பதுங்குகுழிகளை அமைத்தல், காயப்படுகின்றவர்களை பராமரிப்பதற்கேற்ற ஆட்களை இப்போதிருந்தே தெரிவு செய்தல், எமக்குத் தேவையான சாக்குகள், தளபாடங்கள் சேகரித்தல் போன்ற வேலைகளில் நாம் எல்லோரும் ஈடுபட வேண்டும்.

ஆனையிறவு சண்டைக் காலத்தில் எம்முடன் பூரணமாக ஒத்துழைத்த மக்களை இன்று சிங்கள இனவாதிகளும் இராணுவமும் ஒன்று சேர்ந்து ஒட்டு மொத்தமாக எங்களை அழிக்க முனையும் போது நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டீர்கள். இன்றுங்கூட சில பச்சோந்திகள் இந்த இனவாத அரசுடன் ஒட்டி உறவாடி எம் மக்களை அழிப்பதற்கு துணைபோவதையும் நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இவர்களால் பரப்பப்படும் வதந்திகளை இவர்கள் திட்டமிட்டு பரப்பிக்கொண்டே இருப்பார்கள் மக்கள்மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் உண்மையான செய்திகளை நாம்உடனுக்குடன் மக்களுக்கு தெரியப்படுத்துவோம் என்றும் அவர் கூறினார்.

## கைலாசபதி அரங்கில் அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரின் அத்துமீறல்களுககு எதிராக 1989 ஆம் ஆண்டு அகிம்சைப் போராட்டம்நடாத்திய போது இந்திய இராணுவத்தினரால படுகொலை செய்யப்பட்ட சத்தியேந்திரா, ஜெசநாதன் ஆகிய இருவருக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது. காலை 10-00 மணிக்கு நடைபெற உள்ள இக் கூட்டத்தில் அனைத்துப் பீட மாணவர்களையும் கலந்து கொள்ளும்படி பல்கலைக்கழக மாணவர் அவை கேட்டிருக்கிறது.

## நீதிமன்றம்காவல்நிலையம் நெல்லியடியில் திறப்பு

(மாங்குளம்)

வடமராட்சிப் பகுதிக்கான தமிழீழ ஆரம்ப நீதிமன்றம் நெலலியடி செல்லையா பாடசாலைக்கு முன்பான நீதிமன்றக் கட்டடத்தில் நாளை 4ஆம் திகதிஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மற்றும் இப்பிராந்தியத்திற்கான தமிழீழ காவல் துறை நிலையமும் மறுநாள் 5 ஆம் திகதி நெல்லியடியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (82)

## பறக்கும் பொருளொன்று வீழ்ந்து வெடித்ததாம்

பறக்கும் பொருளொன்று வானத்திலிருந்து வீழ்ந்து வெடித்ததாகப்பாணந்துறைப் பொலிசார் கூறியுள்ளனர். பாணந்துறைப் பகுதியில் இருக்கும் கெசல்வத்தை பொலிஸ் பிரிவிலுள்ள 'கௌத்துவ' என்ற இடத்தில் சென்ற வியாழனன்று இரவு பத்து இருபது மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிசார் கூறியுள்ளனர்.

இந்த மர்மப்பொருள் வீழ்ந்து வெடித்த இடத்திலிருந்து சுமார் நூற்று ஐம்பது யார்களுக்கப்பால் இப்பகுதி பொலிஸ் சுபிப்ரீன்டன் சமரசேகரா வசித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இச் சம்பவத்தை நேரில் கண்ட பொலிஸ் சுப்ரீன்டன்ட் சமரசேகரா கூறுகையில், மின்னல் பிரகாசத்துடன் பாரிய பொருளொன்று மிதந்து வந்ததை கண்டதாகவும், அது பின்னர் பெரும்சத்தத்துடன் வெடித்ததாகவும் குறிப்பிட்டார். அத்துடன் விழுந்து வெடித்தஇடத்தில் வெடிமருந்தின் மணம் எதுவும் வீசவில்லை எனவும், குண்டுகள், ஏவுகணைகள் எதுவும் இவ்விடத்தில் வீழ்ந்து வெடிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

## சிறிலங்கா

சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட போர் டாங்கிகள் அவ்வளவு தரம் வாய்ந்தவையாக இல்லாதிருப்பதால் அவற்றைப் புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்த முடியாத நிலையில் இராணுவம் உள்ளது. மேலும் சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட விசைப்படகுகளில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருப்பதால் அவற்றையும் போரில உபயோகிக்க முடியாது உள்ளதாகவும் இதனால புலிகளுக்குஎதிரான போரைத் திறம்பட நடத்த இயலாமல் போகும் என்றும் இராணுவம் கருதுவதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பழுதடைந்த போர்க்கருவிகள் தொடர்பாக சிறிலங்கா அரசு இதுவரை சீனாவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா அரசு மனித உரிமைகள் மீறலில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டி மேற்கத்திய நாடுகள் சிறிலங்காவுக்கு ஆயுதங்களை விற்பதைத் தடை செய்திருப்பதால் சிறிலங்கா அரசு ஆயுதங்களுக்காக சீனாவில் தங்கியுள்ளது.

## தமிழ்க் கிராமங்கள் பொலநறுவை இணைப்பு

மட்டக்களப்பு - பொலநறுவைஎல்லைப்புறத்திலுள்ள மூன்று தமிழ் கிராமங்கள் மட்டக்களப்பு அரச அதிபர் பிரிவிலிருந்து பொலநறுவை அரச அதிபர் பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சில தமிழ் கிராமங்களை பொலநறுவை அரச அதிபர் பிரிவிற்குள்ளும், அநுராதபுர அரச அதிபர் பிரிவிற்குள்ளும் மாற்ற முயற்சிகள்மேற்கொள்ளப்படுவதாகதெரிய வருகிறது

## வர்த்தக சங்கம் கடனுதவி

நல்லூர் பிரதேச வர்த்தக சங்கத்தில் அங்கத்தவர்களாகவுள்ள வர்த்தகர்களுக்கு கடன் உதவியாக ரூபா பத்தாயிரம் வழங்குவதாக நல்லூர் பிரதேச வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

## தொண்டாவின்

விவகாரங்களில் சிறுபான்மை இனத்தின்தலைவரானதொண்டமானின் அதிகாரம் அதிகரிக்கும்எனஇக்குழுவில் ஒருவரான எஸ். எஸ். குணசேகரா தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தொண்டமானின் தீர்வுத்திட்டம் சிங்களவர்களுக்கும், தமிழருக்கும், முஸ்லிமகளுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடியது. இவ்வாறு ஜினதாஸ நிததியபாலா தெரிவித்தார். இப்போது மனித உரிமைகள் மீறல் தொடர்பாக அழுத்தமாக பேசப்படுகிறது. இந் நிலையில் தொண்டமானின தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால், மனித உரிமைகளை மீறிநடப்பவர்கள் வடக்கையும், கிழக்கையும் ஆளும் நிலை உருவாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## விஜேயவீரா குடும்பத்தை லண்டன் அனுப்புக

(லண்டன்]

முன்னாள் ஜே. வி.பி. தலைவர் றோகண விஜேயவீராவின் மனைவியையும் பிள்ளைகளையும் இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்குமாறு ஜே. வி. பி. லண்டன் கிளை சிறிலங்கா அரசிடம் கோரியுள்ளது. இந்த வேண்டுதல் இரண்டாவது முறையாக விடப்பட்டுள்ளது. இதற்கு கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வனசிங்கா மறுப்பு தெரிவித்துள்ளார்.

றோகண விஜேயவீராவின் மனைவியும், பிள்ளைகளும் தொடர்ந்தும் இராணுவ பாதுகாப்பில் இருப்பதாகவும் இதனையே அவர்கள் விரும்புவதாகவும் அவர்கள் தமது விருப்பப்படியே இங்கு இருப்பதாகவும் இவர் லங்கா தீபா பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

## ஜேர்மன் அகதிமுகாமில் தீ; மூன்றுதமிழர்கருகிமரணம்

(பிராங்போர்ட்)

ஜேர்மனியில் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருந்த முகாமொன்றில் தீ பரவியது. இதில் மூன்று தமிழர்கள் பலியாகினர். இவர்கள் மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, பிராங்பேர்ட் நகரத்திலிருந்து சுமார் நாற்பது மைல் தொலைவிலுள்ள 'லம்பதே' நகரிலுள்ள இரு மாடிக்கட்டடமொன்றில் அதிகாலை நேரம் தீப் பிடித்துக் கொண்டது. தூங்கிக்கொண்டிருந்தவர்கள் விழிப்படைந்து வெளியேறுவதற்கு முன்பாக மூவர் தீயினுள் சிக்கி உயிரிழந்தனர் எனவும் மேலும் ஒருவர் தீக்காயங்களோடு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## ராணுவத்தின் பலநாள்முற்றுகையில் திருமலை தமிழ் கிராமங்கள்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர், கட்டைபறிச்சான், சீதனவெளி, கிளிவெட்டி ஆகிய தமிழ்க் கிராமங்கள் கடந்த செவ்வாய் முதல் சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் எவரும் அப்பகுதிகளை விட்டு வெளியேற அநுமதிக்கப்படவில்லை. அந்த கிராமங்களுக்குச் செல்ல சமூக சேவை நிறுவனங்கள் எதுவும் அநுமதிக்கப்படவில்லை. அங்குள்ள மக்களின் நிலமை பற்றி எதுவும் தெரியவரவில்லை.

இதேவேளை இப்பகுதிக்கு வெளியேயுள்ள மக்கள் முஸ்லிம் காடையர்களாலும் சமூக விரோதிகளாலும் கடத்திச் செல்லப்படுவதாக தெரிய வருகிறது.

## தமிழர் மீது துன்புறுத்தல் கிழக்கில் அதிகரிப்பு

பொலநறுவ -மட்டக்களப்பு மாவட்ட எல்லையிலுள்ள தமிழ்மக்களை சிறிலங்கா இராணுவத்தினர் துன்புறுத்தி வருகின்றனர். அப்பகுதியினை சுற்றி வளைக்கும் இராணுவத்தினர் அங்கு வசிக்கும் தமிழ் மக்களைப் பிடித்துச் சென்று இராணுவ காவலரண்களை அமைக்கும்படி வற்புறுத்துகின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## விசேட அறிவித்தல்

### தனியார் கல்விநிறுவன ஒன்றியம்

நாளை (4 - 2 - 1992) செவ்வாய்க்கிழமை பாடசாலை நாளாக உள்ள காரணத்தினால் அன்றைய தினம் காலை நேர வகுப்புகளையோ, பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பகல்நேர வகுப்புகளையோநடாத்தக் கூடாது என அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பொதுச் செயலாளர்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

(2174) யாழ். மாவட்டம்

## மரண அறிவித்தல்

### திருமதி நேசரத்தினம் விக்கிரமரட்ண

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நேசரத்தினம் விக்கிரமரட்ண கொழும்பு வைத்தியசாலையில் 01 - 02 - 1992 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு காலமாகினார். இவர் காலஞ்சென்ற டி. சி. விக்கிரமரட்ணாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சி. சரவணமுத்து - நாகம்மா ஆகியோரது மூத்த புதல்வியும், திருமதி மங்கையற்கரசி சான்டர்ஸ் (லண்டன்), ச. துரைராசா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) திருமதி சேதுபதி தனபாலசிங்கம் (ராணி) ஆகியோரது அன்புச் சகோதரியும், Dr. S.C. சான்டர்ஸ் (லண்டன்), திருமதி பாக்கியலட்சுமி துரைராசா (அரசினர் வைத்தியசாலை, மந்திகை), க. தனபாலசிங்கம் (நீர்ப்பாசன இலாகா, கந்தளாய்) ஆகியோரது அன்பு மைத்துனியும், திருமதி சுமணா ஜெயதாசன், வி. குணசிறி (ஜேர்மனி), திருமதி அமுதா தெய்வேந்திரராசா(ஜேர்மனி),வி.கபிலசிறி (ஜேர்மனி)ஆகியோரது அன்புத்தாயாரும், ச. ஜெபதாஸ் (ஓய்வு பெற்ற நெடுஞ்சாலை திணைக்கள உத்தியோகத்தர்), திருமதி ஜயந்தி குணசிறி (ஜேர்மனி), வீ. தெய்வேந்திரராசா (ஜேர்மனி) ஆகியோரது அன்பு மாமியாரும், ஜெயசுதன், ஜெயசுவேந்தி, விஜயகீதா, கிறிஸாந்தினி, ஜேர்மனியிலுள்ள டிலக்சிகா, அகிலன், இந்துஷான், கிறிஷான் ஆகியோரது அன்புப் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 02 - 02 - 1992 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாதகல் கிழக்கு,
மாதகல்.
02-02-1992

தகவல்:
திருமதி சேதுபதி தனபாலசிங்கம்
(சகோதரி)

[சி/3881]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.